**செய்தி வெளியீடு எண் : 1437** **நாள்:28.12.2021**

செய்தி வெளியீடு

**திருவொற்றியூர், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய பழைய குடியிருப்பு இடிந்து விழுந்த விபத்தில், குடியிருப்பு மக்களை துரிதமாக வெளியேற்றி உயிரிழப்பு ஏற்படாமல் தடுத்த திரு. தனியரசு அவர்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் நேரில் அழைத்து வாழ்த்திப் பாராட்டினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (28.12.2021) தலைமைச் செயலகத்தில், திருவொற்றியூர், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய பழைய குடியிருப்பு இடிந்து விழுவதற்கு முன்பாக, தக்க தருணத்தில் குடியிருப்பு வாசிகளை எச்சரிக்கை செய்து, அனைவரையும் துரிதமாக வெளியேற்றி உயிரிழப்பு ஏற்படாமல் தடுத்த திரு. தனியரசு அவர்களை நேரில் அழைத்து வாழ்த்திப் பாராட்டினார்.

திருவொற்றியூரில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தினால் 1993-ல் கட்டப்பட்ட பழைய குடியிருப்பு நேற்று (27.12.2021) இடிந்து விழுந்ததில் 24 வீடுகள் முழுவதுமாக சேதமடைந்தன. “D” பிளாக் குடியிருப்புக் கட்டடத்தில் விரிசல் ஏற்பட்டதை அறிந்து இதுகுறித்து உடனடியாக அப்பகுதியைச் சேர்ந்த திரு. தனியரசு அவர்கள் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய அலுவலர்களுக்கு தகவல் தெரிவித்தார். மேலும், அக்கட்டடத்தில் விரிசல் அதிகமாவதை கண்டறிந்து, மக்களை உடனடியாக பாதுகாப்பாக வெளியேறிட எச்சரிக்கை செய்ததால் இவ்விபத்தில் பெரும் உயிரிழப்பு தடுக்கப்பட்டது.

இந்நிகழ்வின்போது, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. எஸ். சுதர்சனம், திரு.கே.பி. சங்கர் ஆகியோர் உடனிருந்தனர்.

•••••••••

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**